'டம்மி' முதல்வர் விஜயின் அரசுக்குச் சாட்டையடி!

# உதயநிதி ஸ்டாலின் கைது! பின்வாங்கிய கோமாளி அரசு!

## சிறையில் அடைக்கமாட்டோம்! – என உறுதி!

**சென்னை, ஆக. 5-**

**தஞ்சாவூர் பேச்சைத் தொடர்ந்து நேற்று காலை 11 மணியளவில் கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலினின் கைது விவகாரத்தில், தற்போது மிகப்பெரிய சட்டத் திருப்பம் ஏற்பட்டுள்ளது.**

உதயநிதி ஸ்டாலினைச் சிறையில் அடைக்கக் காவல்துறையினர் முற்பட்ட நிலையில், நீதிமன்றத்தில் நடைபெற்ற அவசர விசாரணையின் போது தமிழ்நாடு அரசு தெரிவித்த வாதத்தைத் தொடர்ந்து, நேற்று மாலையிலேயே அவரை காவல் நிலைய ஜாமீனில் விடுவிக்க நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரது தரப்பு மூத்த வழக்கறிஞர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவசர மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். அந்த மனுவில், அரசியல் பழிவாங்கும் நோக்கோடும், சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கவுள்ள நிலையிலும் எதிர்க்கட்சித் தலைவரைக் சட்டத்திற்குப் புறம்பாக ரிமாண்ட் செய்யக் காவல்துறை திட்டமிட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

மனுவை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி முன், உதயநிதி ஸ்டாலின் தரப்பு மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர்களிடையே காரசாரமான வாதங்கள் நடைபெற்றன. விசாரணையின் போது அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், உதயநிதி ஸ்டாலினைக் சிறையில் அடைக்கும் எண்ணம் அரசுக்கோ அல்லது காவல்துறைக்கோ இல்லை எனத் தெளிவுபடுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மீது அளிக்கப்பட்ட புகாரின் பேரில் சட்டப்பூர்வமாக முதற்கட்ட விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. அவரைச் சிறையில் அடைத்து ரிமாண்ட் செய்யும் நோக்கம் காவல் துறைக்கு இல்லை. காவல் நிலையத்தில் வைக்கப்படும் முறையான விசாரணைக்குப் பிறகு, காவல் துறை ஜாமீனிலேயே அவர் விடுவிக்கப்படுவார். அரசு தரப்பின் இந்த வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, காவல்துறையின் ரிமாண்ட் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.


**நீதிமன்றத்தின் அதிரடி உத்தரவு :** இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிமன்றம், உதயநிதி ஸ்டாலினின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், விசாரணைக்கு அவர் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையோடும் முக்கிய உத்தரவைப் பிறப்பித்தது: காவல் நிலையத்தில் விசாரணை முடிந்த கையோடு, 'செவ்வாய்க்கிழமை மாலையிலேயே உதயநிதி ஸ்டாலினைச் சொந்த ஜாமீனில் விடுவிக்க வேண்டும் அவரை நீதிமன்றக் காவலில் அடைக்கக் கூடாது' எனத் தெளிவுபடுத்தப்பட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவைத் தொடர்ந்து நீலாங்கரை மற்றும் காவல் நிலையப் பகுதிகளில் முகாமிட்டிருந்த திமுக தொண்டர்கள் உற்சாகமடைந்தனர். உதயநிதி ஸ்டாலினைக் சிறையில் அடைத்து அரசியல் ரீதியாக முடக்க நினைத்த ஆளுங்கட்சியின் முயற்சிக்கு நீதிமன்றத்தின் இந்த உத்தரவு பெரும் சாட்டை அடியாக அமைந்திருப்பதாக தி.மு.க. வழக்கறிஞர்கள் அணி தெரிவித்துள்ளது.

---

கழகத் தலைவர் – மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆக.7 அன்று

# முத்தமிழறிஞர் கலைஞரின் 8வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர்கள் வேண்டுகோள்!



தகைமைசால் தலைவராக எழுத்தாளராக கவிஞராக சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாக இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக தலைசிறந்த நிர்வாகியாக தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளினையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் **"அமைதிப் பேரணி", ஆகஸ்ட்7, வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.**

முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு சென்னை மேற்கு சென்னை தென்மேற்கு சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நாள் : 04.08.2026 **சென்னை மாவட்ட தி.மு.க.**

---



கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்ததை கண்டித்து வேலூர் மாவட்ட கழக அலுவலகம் அருகில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி. நந்தகுமார் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி மற்றும் மாநகரக் கழக செயலாளர் ப.கார்த்திகேயன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் தலைமை கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பங்கேற்றனர். பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.



திருப்பத்தூர் நகரில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் திருப்பத்தூர் நகரம், திருப்பத்தூர் ஒன்றியம், கந்திலி மத்திய ஒன்றியக் கழக நிர்வாகிகள் பங்கேற்று கைது செய்யப்பட்டனர். எஸ். ராஜேந்திரன், அ. நல்லதம்பி, கே.பி.ஜோதி, ரகுநாத், கு. ராஜமாணிக்கம், சம்பத் குமார், குணசேகரன், வி.வடிவேலு உள்ளிட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை மிசா கு. பாலகிருட்டிணன்
### ஆகஸ்ட் 5 (2013)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, மன்னார்குடி நகரச் செயலாளர் – மன்னார்குடி வட்டக் கழகச் செயலாளர் – தஞ்சை மாவட்ட பொருளாளர் – திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர் – பொதுக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை வகித்து, முழுநேர கழகப் பணியாற்றியவர்.

கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும், மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பொறுப்பேற்று, அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதுடன், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கடுங்காவல் தண்டனையும் – மிசா கைதியாக ஓராண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

விளாத்திகுளம் கழக சட்டமன்ற உறுப்பினர்

## மார்க்கண்டேயனுக்கு ஜாமீன்!



சென்னை, ஆக. 5 -

முதல்வர் விஜய்க்கு மிரட்டல் விடுத்ததாக கைது செய்யப்பட்ட விளாத்திகுளம் தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு முதல்வர் விஜய்க்கு மிரட்டல் விடுத்ததாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில் விளாத் தி குளம் தி.மு.க. எம்.எல்.ஏ. ஜீ.வி.மார்க்கண்டேயனை,

தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் ஜூலை 20 ஆம் தேதி கைது செய்தனர்.

தன்னை சிறையிலடைத்து தூத்துக்குடி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மார்க்கண்டேயன் தாக்கல் செய்த மனுவை தூத்துக் குடி முதன்மை அமர்வு நீதிமன்றம், தள்ளுபடி செய்தது.

இதைய டுத்து. ஜாமீன் கோரி மார்க்கண்டேயன் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தமனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்த போது, மார்க்கண்டேயன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன். இதுபோல பேசியிருக்க கூடாது எனக் கூறி தூத்துக்குடி நீதிமன்றம் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதையடுத்து மார்க்கண்டேயனுக்கு ஜாமீன் வழங்கிய நீதிபதி. 'இது போல் இனிமேல் பேசப் போவதில்லை என தூத்துக்குடி 'நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளிக்க வேண்டும். சட்டமன்ற கூட்டத்தொடர் நடக்கும் நாட்கள் தவிர மற்ற நாட்களில் இரண்டு வாரங்களுக்கு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும்' என நிபந்தனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஆர். இராமசாமி
### ஆகஸ்ட் 5 (1971)



திராவிட இயக்க காலத்திலிருந்து அண்ணா – கலைஞர் ஆகியோரின் கலையுலகப் பயணத்தில் கிடைத்த மாணிக்கம். நடிப்பிலும், பாடுவதிலும் சிறந்து விளங்கியவர். 'நடிப்பிசைப்புலவர்' என நாட்டு மக்களால் அழைக்கப்பட்டவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். கழகப் பொதுக்குழு உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தி.மு.கழக துவக்க காலம் முதல் கழகத்திற்காக கலையுலகில் ஈட்டிய புகழையும், பொருளையும் அர்ப்பணித்தவர்.

தேர்தல் களத்தில் கழகம் ஈடுபட்ட வேலைகளில் தீவிரமாகப் பிரச்சாரப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

"பழகுதற்கு இனியவர், பகுத்தறிவுச் சுடர், பாசத்திற்குரிய நண்பர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**